# பக்தி இலக்கியங்களில் – விண்ணியல் கூறுகள்
# 'Astronomers Elements are Devotional Literature'

77

இ.தினேஷ்குமார்[1] & முனைவர் அ. இராமலிங்கம் [2]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2]இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), ஈரோடு.

**ஆய்வுச் சுருக்கம்**

காலந்தோறும் புதுப்புதுக் கட்டமைப்புகளும் வளர்ந்து வந்த தமிழ் கிபி ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமய வளர்ச்சிக்காக பங்காற்றியது. தமிழில் சங்க காலந்தொட்டு பாடல் பெற்று வரும் பெருந்தெய்வங்களான சிவபெருமானையும், திருமாலையும் வணங்கி வருபவர்கள் முறையே சைவம்(சிவம்), வைணவம்(திருமால்) என்ற இரு பிரிவுகள் இக் காலகட்டத்தில் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களை மீட்டெடுக்க நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி பக்தி இலக்கியத்தை மலரச் செய்தனர். இத்தோடு ஆழ்வார்களும், நாயன்மார்களும் தங்களின் பக்தி பாடல் மூலமாக சில அறிவியல் தொழில் நுட்ப செய்திகளை அன்றே தங்களின் பாடல்களின் மூலமாக தெரியப்படுத்தினர்.

**ஆய்வு நோக்கம்**

அறிவியல் வளர்ச்சி இல்லா காலகட்டத்தில் பக்தோடு சேர்ந்தே தங்களின் அறிவியல் சிந்தனைகளை ஆழ்வார்களும், சைவ அடியார்களும் தங்களின் பாசுரங்களிலும், பதிகங்களிலும் பாடியிருக்கின்றனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

துறைதோறும் நூற்கள் ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிட வேண்டும். என்ற பாரதிதாசனது வரிகளுக்கேற்ப இன்று கணினி யுகத்தில் வளம் வந்து கொண்டிருக்கும் தமிழ் மொழியால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த புலவர்கள் பாடல்கள் மூலம் இன்றைய பல் தொழில் நுற்பக் கூறுகள் மூலம் விண்ணியல் புவியியல் போன்ற கூறுகளைப் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தம் பாடல்களில் குறிப்பிட்டிருப்பது வியக்கத்தக்கதே, அவ்வகையில் இக்கட்டுரையில் பக்தி இலக்கியம் காட்டும் விண்ணியல் அறிவு பற்றிக் காண்போம்.

**திருப்பாவை காட்டும் மழைப்பொழிவு சார் விண்ணியல்**

வைணவ சமயத்தின் முழுமுதற் கடவுளான திருமாலை பாடி ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள் பாடிய பாசுரங்களே நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத் தொடுக்கப்பட்டது. அவ்வகையில் திருப்பாவையில் பக்திச் சுவையுடன் அவள் அறிவியல் பற்றி அறிந்திருந்த விண்ணியல் அறிவும் வெளிப்படுத்தியுள்ளாள் ஆண்டாள் நாச்சியார்.





**”ஆழி மலைக்கண்ணா ஒன்று நீ கைரவேல்”..**
**தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்**
**வாழவுலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்”[1]**

இப்பாடல் வழியாக மழையானது எவ்வாறு பொழிகிறது என்ற முறையைத் திருமாலோடு ஒப்பிட்டு விளக்குகிறார் ஆண்டாள். மார்கழியில் பாவை நோன்பிருந்து அதிகாலையில நீராடி திருமாலை வணங்கி வருகிறாள்.

மார்கழியில் பாவை நோன்பிருந்து அதிகாலையில் நீராடி திருமாலை வணங்கி வருகிறாள். அவள் குளிக்கத் தெளித்த நீர் தேவைப்படுகிறது. அதற்காக திருமாலை மழைப் பொழிய வேண்டுகிறாள்.

நீரானது கடலிருந்து சுழன்று காற்றாக மேலெழுந்து மின்னலாக உருமாறி பேரிடியுடன் மழைப் பொழிகின்ற சுழற்சியினை ஆண்பால் பர்க்கடலுள் பள்ளி கொண்டிருக்கும் கண்ணனே நீ கடலில் நீரினை முகந்து கொண்டு மேலேறி உன் நிறமாகிய கருமை நிறத்தை ஒத்த நிறத்தை விண்ணில் பரவச் செய்து திருமாலின் சக்கரம் போல் மின்னலாக உருப்பெற்று அவனது வலம்புரி சங்கம் எழும்பும் ஓசையினைப் பெற்று அதிர்ந்தது. அவன் வில்லாகிய சக்கரத்தில் இருந்து இடைவிடாது பாயும் அம்பினைப் போல் மழைப் பொழிவாயாக என்று வேண்டுவதன் மூலம் ஆண்டாளின் பக்தியில் அறிவியல் சிந்தனை வெளிப்படுகிறது.

**திருஞானசம்பந்தரும் ஒன்பது கோள்களும்**

சைவ சமய நாயன்மாரான திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் தேவாரம் என்று பெயரிட்டு பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டாம் திருமுறையில் அமைந்திருக்கும் “கோளறு பதிகம்“ இடம்பெற்றுள்ளது. இன்றைய விண்ணியல் அறிஞர்கள் கணித்துக் கூறிய ஒன்பது கோள்களையும் ஞானசம்பந்தர் ஒரே பாடலில் அமைத்துப் பாடியிருப்பது சிறப்பு ஆகும். இப்பாடல் மூலம் விஞ்ஞானம் இல்லாத காலத்திலேயே ஞானசம்பந்தர் விண்ணில் இருக்கும் கோள்களை அறிந்திருந்தார் என்பது வியப்பில் கொண்டு சேர்க்கிறது.

மதுரை நாடு சமண சமயத்திற்குள் மூழ்கி வருகிறது. ஆதலால் அதனை மீட்க ஞானசம்பந்தர் புறப்பட்டபோது உடனிருந்த அப்பர் சுவாமிகள் நேரம் சரியாக இல்லை என்று தடுத்தபோது கோள்களின் நிலையைப் பற்றி பாடப்பட்டது இப்பாடல்,

**”வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிக நல்ல வீணைதடவி …**
**ஞாயிறு திங்கள் செவ்வாய்**
**புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பி ரண்டுடனே”[2]**

இப்பாடலில் மதுரையை மீட்கப் புறப்பட்ட போது ஞானசம்பந்தர் சிவபெருமானை வணங்குகின்ற அடியார்களுக்கு கோள்களால் இடர் தேராது என்று சூரியன், திங்கள் முதலிய

ஒன்பது கோள்களைப் பற்றி ஒரே பாடலில் குறிப்பிடுவதன் மூலம் அவரின் விண்ணியல் அறிவு புலப்படுகிறது. இதனை சோதிதத்துடனும் ஒப்பிட்டுக் கூறுவது ஆயினும் விண்ணியல் பார்வையே முதன்மை பெறுகிறது.

**முடிவுரை**

திருப்பாவை மற்றும் கோளறு பதிகம் என்று இரண்டு நூல்கள் மட்டுமில்லாது பிற பக்தியிலக்கியக் காப்பியங்களிலும் விண்ணியல் சார்ந்த கூறுபாடுகள் அமைந்திருக்கின்றன என்பது ஆராயத்தக்கது ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

1. திருப்பாவை, ஆண்டாள், சீனிவாசன் ரா. (உ.ஆ), 1995, ப.32.
2. கோளறு பதிகம், திருஞானசம்பந்தர்.